# பத்திரிக்கைச் செய்தி

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தஞ்சாவூர் பிரிவு அலுவலகத்தை அணுகி தான் திருவிடைமருதூரில் உள்ள நெல் நேரடி கொள்முதல் நிலையத்தில் தான் வைத்திருந்த நெல்லை விற்க அணுகியதாகவும், தன்னிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்ய திரு.கேசவமூர்த்தி, பில் எழுத்தர், நேரடி கொள்முதல் நிலையம், காமாட்சிபுரம், திருவிடைமருதூர் அவர்கள் தனக்கு ரூ.4,200/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாக புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 09.03.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கேசவமூர்த்தி, நேரடி கொள்முதல் நிலைய பில் எழுத்தர் ரூ.4,200/-த்தை லஞ்சமாக புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார். மேலும் மேற்படி திரு.கேசவமூர்த்தி அவர்களிடமிருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.30,600/- கைப்பற்றப்பட்டது.

# PRESS NOTE

The complainant approached the Vigilance & Anti – Corruption, Thanjavur Detachment and gave complaint that he approached the Direct Procurement Centre, Thiruvidaymaruthur for selling his paddy and Tr.Kesavamoorthy, Bill Collector, Direct Procurement Centre, Thiruvidaymaruthur demanded bribe amount of Rs.4,200/- for procuring his paddy. In this connection a case was registered and a trap was organized today 09.03.2021.

During the course of trap proceedings, Tr.Kesavamoorthy, Bill Collector, Direct Procurement Centre, Thiruvidaymaruthur reiterated the earlier demand and received the bribe amount of Rs.4,200/- from the complainant. The trap money of Rs.4,200/- was recovered from him. Further the unaccounted money of Rs.30,600/- was seized from the accused. The accused was arrested.